


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 336

புதன்கிழமை
29 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## யாழ்ப்பாணத்தில் டெங்கு அபாயம் அதியுச்ச நிலை!

கொழும்பு, ஒக். 29
நாட்டின் டெங்குத் தொற்றின் அபாயம் அதிகளவில் உள்ள பகுதிகளில், யாழ்ப்பாணம் மாவட்டமும்

15

# இனப்படுகொலைச் சாட்சியமே செம்மணி மனிதப் புதைகுழி!

## இலங்கைத் திருச்சபை தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 29
செம்மணிப் புதைகுழி என்பது இனப்படுகொலை நடத்தப்பட்டதன் அடையாளமாகவும், சாட்சியமாகவும் உள்ளது. இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிவேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்கின்றது- இவ்வாறு இலங்கைத் திருச்சபையின் யாழ். குரு முதல்வர் செல்வன் தெரிவித்துள்ளார்.

15

## மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு!

*முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்து*

கொழும்பு, ஒக். 29
மாகாண சபைகளுக்கு அதிகாரப்பகிர்வு அவசியம். அந்தச் சபைகளை மக்கள் பிரதிநிதிகளே முழுமையாக ஆள வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க

15

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

*தடுப்பில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி*

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் ஹெரோய்னை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

15

## செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரிப் போராட்டம்!

03

## ஊழியர் வெற்றிடங்களில் ஊழல் செய்யாதீகள்!

யாழ். பல்கலையில் நேற்றுப் போராட்டம்

06

கிளிநொச்சி அக்கராயன் குளத்தில்

## காணாமற்போன இளைஞர் சடலமாக நேற்று மீட்பு!

கிளிநொச்சி, ஒக். 29
கிளிநொச்சி அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யூனியன்குளம் பகுதியில் காணாமற்போன 27 வயதுடைய இளைஞர் அழுகிய நிலையில் நேற்றுச்

15

போதைப்பொருள்கள் தொடர்பில்

## 62 லட்சம் பேரிடம் விசேட சோதனை!

கொழும்பு, ஒக். 29
2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் தற்போதுவரை அண்ணளவாக 62 லட்சம் பேரிடம் போதைப்பொருள் தொடர்பான

15





கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு

## தமிழ்ப் பொறுப்பதிகாரி

கிளிநொச்சி, ஒக். 29
கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு தமிழ்மொழி பேசக்கூடிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து கிளிநொச்சி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.
தமிழர் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப்பொறுப்பதிகாரிகளை அரசாங்கம் நியமித்து

15

## ரணிலுக்கு எதிரான வழக்கு: இன்று மீண்டும் விசாரணை!

கொழும்பு, ஒக். 29
அரச நிதியை மோசடியாகப் பயன்படுத்தியதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் மீது தொடரப்பட்ட வழக்கு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில்

15

பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பு:

## ஹெரோய்னுடன் மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஹெரோய்னுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணம், கொக்குவில், பொற்பதி ஆகிய பகுதிகளைச்

15

## முச்சந்தி முரளி

"முதலையும்
மூர்க்கனும்
மட்டுமில்லை
திசைகாட்டிக்காரரும்
கொண்டது
விடாயினம் போல"

## பாடசாலை நேரத்தை நீடிப்பதில் அரசு உறுதி

கொழும்பு, ஒக். 29
ஜனவரி மாதத்தில் இருந்து பாடசாலைகளின் நேரத்தை பிற்பகல் 2 மணிவரை நீடிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கல்வி அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவேவ இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4238 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 19 24 44 55 |
| விசேட எழுத்து | Y |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1305 |
| வெற்றி இலக்கினம் | [illegible] |
| வெற்றி இலக்கங்கள் | 06 21 34 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0264 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 7 2 0 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2344 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 07 55 59 60 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5996 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 1 9 7 7 2 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2026 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 43 54 60 70 |
| விசேட எழுத்து | U |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0571 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 2 8 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0112 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 33 49 |

# 3 ஆண்டுகளில் போதைப்பொருளை முற்றாக ஒழிப்பதே அரசின் இலக்கு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.29**

**அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நாட்டிலிருந்து போதைப்பொருள்களை முற்றாக ஒழிப்பதே அரசாங்கத்தின் இலக்கு எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவுடன் இணைந்து அமைச்சர் ஆனந்த விஜேபால, நேற்று முன்தினம் மாலை இலங்கை ராமண்ண மஹா நிகாயவின் மகாநாயக்க தேரர் மகுலேவே விமல தேரரைச் சந்தித்தார்.

நாளை வியாழக்கிழமை முதல் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள போதைப்பொருள் மற்றும் பாதாள உலக நடவடிக்கைகளை ஒழிப்பதற்கான தேசிய வேலைத் திட்டம் தொடர்பாகதேரருக்கு விளக்கமளிப்பதற்காகவே இந் தச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாதாள உலக நடவடிக்கைகளை அடக்குவதற்கு அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (ஏ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0704 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 3 2 7 3 5 7 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2970 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 12 52 55 78 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 28 37 48 67 |
| வெற்றி வாரம் | 5131 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0801 |
| வெற்றி இலக்கம் | 16 17 25 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| மகரம் | ♈ |
| வெற்றி இலக்கம் | 08 14 47 62 |
| சீட்டிழுப்பு வாரம் | 4682 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 29 |
| வெற்றி இலக்கம் | 04 12 18 47 |
| வெற்றி வாரம் | 2146 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 28.10.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 04 24 30 44 |
| வெற்றி வாரம் | 2796 |

# மலேசியக் கப்பல் கொழும்பு வருகை

கொழும்பு, ஒக்.29

மலேசிய கடலோரக் காவற்படைக் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தது.

குறித்த கப்பலை இலங்கைக் கடற்படை சம்பிரதாயபூர்வமாக வரவேற்றுள்ளது.

இந்தக் கப்பலின் பணியாளர்கள் நாடுமுழுவதும் சுற்றுலாப்பயணங்களில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# அரசியல்மயமாகியுள்ளது பொலிஸ் திணைக்களம்!

## இப்படிக் கூறுகின்றார் நாமல்

கொழும்பு, ஒக்.29

பொலிஸ்மா அதிபர் அரசியல்வாதி போன்று செயற்படுகிறார். பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலுக்கு அமைவாகவே பொலிஸார் செயற்படுகின்றனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்கள்பிரதிநிதி ஒருவரை பகிரங்கமாகச்சுட்டுக்கொலை செய்யும் நிலையே தற்போது உள்ளது. இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொலைகளையும் அரசாங்கம் பாதாளக் குழுக்களின் கணக்கில் சேர்க்கிறது. எதிர்க்கட்சியின் சகல உறுப்பினர்களும் பாதாளக்குழுக்களுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டையும் அரசாங்கம் ஏற்படுத்துகின்றது.

323 கொள்கலன்கள் எங்கு சென்றது என்பது இன்றுவரை கண்டுபிடிக்கமுடியவில்லை. இலங்கைக்கு இரண்டு கொள்கலன்களில் ஐஸ் போதைப்பொருள் வருகின்றது என்று சர்வதேச புலனாய்வுப் பிரிவு அரசாங்கத்துக்குத் தகவலளித்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை. தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை அரசாங்கம் தனது அரசியல் தேவைக்காக பயன்படுத்திக்கொள்கிறது - என்றார். (ஏ-இ)



# மீனவர்களுக்கு உயர்தர எரிபொருள்!

கொழும்பு, ஒக்.29

கடற்றொழிலாளர்களுக்கு, உயர்தரத்திலான எரிபொருளைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடற்றொழிலாளர்கள் சமூகத்துக்கு நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனமும் இணைந்து முன்னெடுக்கும் இந்த வேலைத்திட்டத்தை, வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி மற்றும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் இணைந்து நேற்று ஆரம்பித்து வைத்தனர். (ச-இ)

# வடக்கு மாகாணத்தில் 'GovPay' அறிமுகம்!

கொழும்பு, ஒக்.29

அரசாங்க டிஜிற்றல் கட்டணத்தளமான 'GovPay' மூலம் வட மாகாணத்தில் போக்குவரத்துக்கான அபராதம் செலுத்தும் முறை அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் அமைச்சர் ஆனந்த விஜேபால, வட மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி ஏ தனபால, வன்னிப்பிரிவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.ஏ.கே.ஏ. இந்திக்க ஹப்புகொட, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ. சந்திரசேன, யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறைக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.எச். மாரப்பன, வவுனியாப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ஏ. சோமரத்ன ஆகியோரும் கலந்துசிறப்பித்தனர்.

இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம், வடமாகாணத்தில் உள்ள வாகனச் சாரதிகள், GovPay உடன் இணைக்கப்பட்ட எந்தவொரு இணையத்தள அல்லது மொபைல் வங்கி செயலி அல்லது டிஜிற்றல் கட்டணச் செயலி மூலமாக, குறித்த இடத்திலேயே போக்குவரத்து அபராதங்களை வசதியாகவும், பாதுகாப்பாகவும், உடனடியாகவும் செலுத்தமுடியும். (ச-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி கவனவீர்ப்புப் போர்!

யாழ்ப்பாணம்,ஒக்.29

அரியாலை செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிவேண்டிக் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ். செம்மணி வளைவுக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை வடக்கு - கிழக்கு மாவட்ட அவை மற்றும் நீதிக்கும் சமாதானத்துக்குமான பணிக்குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள், கிறிஸ்தவமதகுருமார்கள், பாதிக்கப்பட்ட மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'செம்மணிப் புதைகுழிக்குச் சர்வதேச விசாரணை வேண்டும்', 'செம்மணிப் படுகொலைக்கு நீதி வேண்டும்' உள்ளிட்ட பல்வேறு சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-66)

## 196 கிலோ கேரளக் கஞ்சாவுடன் முன்னாள் சார்ஜென்ட் கைது

கொழும்பு,ஒக்.29

தொம்பே, நாகஹதெனிய, பலுகமப் பகுதியில், பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் நடத்திய சிறப்புச்சோதனை நடவடிக்கையில், 196 கிலோ 218 கிராம் கேரளக் கஞ்சாவுடன் விமானப்படையின் முன்னாள் பைலட் சார்ஜென்ட் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தொம்பேப் பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர், இலங்கை விமானப்படைத்தளத்தில், பைலட் சார்ஜென்டாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## போதைப்பொருளுடன் கனடா நாட்டவர் கைது

கொழும்பு,ஒக்.29

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையம் ஊடாக, 182.5 மில்லியன் ரூபா பெறுமதியான ஹாஷிஷ் போதைப்பொருளைக் கடத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டில், கனடா நாட்டைச் சேர்ந்த ஒருவர், சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 21 வயதுடைய கனடாவில் உயர்கல்வி பயிலும் மாணவர். சந்தேகநபர் டுபாயில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளார்.

சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட போதைப்பொருடன், மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (க-இ)



## இராமேஸ்வரத்துக்கு புதிய கப்பல் சேவை

புதுடில்லி,ஒக்.29

இராமேஸ்வரம் -தலைமன்னார் இடையே புதிய கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் சர்பானந்த சோனோவுக்கும் இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுரா கருணாதிலகவுக்கும் இடையில் மும்பையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புதிய கப்பல் சேவையைத் தொடங்குவதன்மூலம் இந்தியா -இலங்கை கடல்சார் இணைப்பை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இரு நாட்டு அமைச்சர்களும் விவாதித்துள்ளதாக இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச-இ)

## இலங்கை – அவுஸ்திரேலியா கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம்

கொழும்பு, ஒக்.29

இலங்கையும் அவுஸ்திரேலியாவும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான இருதரப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

இந்த நிகழ்வு நிதியமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும், பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கும், மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிப்பதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் ஹர்ஷனா சூரியப்பெரும, இலங்கை சார்பாக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

இந்த ஒப்பந்தங்களின்கீழ் மறுசீரமைக்கப்பட்ட மொத்தக் [illegible] என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கடவுளை ஆர் காப்பாத்துவினம்?

நேற்றுப் பாறனை, திருக்கலியாணத்தோட இந்த வருசக் கந்தசட்டி விரதம் முடிவுக்கு வந்திட்டுது. ஆனால் கந்தசட்டியின்ர ஆறாம் நாளில நடந்த சூரன்போரைப் பற்றின கதையள் மட்டும் இன்னும் முடிவுக்கு வந்த பாடாயில்லை. ஒவ்வொரு வருசமும் ஏதாவது வித்தியாசமாச் செய்து தங்கட கோயிலை பேமஸாக்க வேணும் எண்டு நினைக்கிறவை செய்த திருவிளையாடல்களைப் பார்த்து ரசிக்கிறதா, சிரிக்கிறதா, ஆத்திரப்படுறதா எண்டு தெரியாமல் கிடக்குது.

கிளிநொச்சியில ஒரு முருகன் கோயிலில சூரனைச் சங்கரிக்கிறதுக்காக ,முருகனை அங்கால ஓரமாப் போய் விளையாட விட்டிட்டு, கையில வேலையும் தூக்கிக்கொண்டு கோயில் ஐயரே மயில் வாகனத்தில ஏறி களத்தில இறங்கிட்டார்.அந்தக் கோயில் பெடியள் ஐயரைத் தூக்கிக்கொண்டு சூரனைச் சுத்தி 'பொக்ஸ்' அடிக்கிறதும், முன்னேறிப் பாயிறதும், குத்திச் சுழன்டடிக்கிறதுமாக மொத்த வித்தையையும் காட்ட, ஐயரும் அதை ரசிச்சபடி சூரனின்ர ஒவ்வொரு தலையையும் வேலால குத்தி, விழுத்த வெளிக்கிட்டார். ஒவ்வொரு தலை விழேக்கையும் சனங்கள், ஏதோ முருகன் தான் கையாலயத்தில இருந்து ஐயர் ரூபத்தில வந்து சூரனைச் சுத்தி வளைச்சு அட்டாக் பண்ணுறார் எண்டு நினைச்சு 'அரோகரா' எண்டு கத்தினபடி ஐயரை முருகனா நினைச்சுக் கும்பிட்டவை. பாவம் தனக்குக் கிடைக்கவேண்டிய அரோகராவும், கும்பிடலும் வித்தை காட்டின ஐயருக்கு போகுதே எண்டு ஒரு ஓரமா நிண்டு முருகன் கவலைப்படுறமாதிரித்தான் கிடந்தது.

கிளிநொச்சியில இப்பிடி எண்டால், யாழ்ப்பாணத்தில் உள்ள சில கோயில்களில முருகனை சகடையில கொண்டந்து வைச்சுப்போட்டு, சூரனை ஹன்ரர் ஒண்டில ஏத்திவைச்சு, சண்டையெண்டால் சண்டை அப்பிடியிபொரு சண்டை. உக்ரைன் - ரஷ்யாச் சண்டைகூட பிச்சை வாங்கோணும். அந்தளவுக்கு ஹன்ரரில வந்த சூரன், இப்பத்தை யாழ்ப்பாணத்து வாள்வெட்டு ரவுடியள் மாதிரி, முருகனை மட்டுமில்லாமல் சுத்திநிண்ட சனமே வெருண்டடிச்சு ஓடுற மாதிரி உறுமிக்கொண்டும் புழுதியைக் கிளப்பிக் கொண்டும் ஆடின ஆட்டத்தில அங்க சூரசங்காரம் நடக்குதா, இல்லாட்டி முருகசங்காரம் நடக்குதா எண்டே சனத்துக்கு விளங்கேலை.

கோயிலில சாமி தூக்க இளந்தாரிமாருக்குத் தட்டுப்பாடு. எல்லாரும் கனடா, லண்டன், பிரான்ஸ் எண்டு பறந்தால் இஞ்ச என்னெண்டு பெடியள் இருப்பினம்? அதால இப்ப சாமிகாவுறதுக்கும் தேர் இழுக்கிறதுக்கும் ஹன்ரரையும், டிப்பரையும், ஜே.சி.பி. யையும் தான் நம்பவேண்டி இருக்குது. அப்பிடி ஆக்கள் இல்லா ஊரிலை ஹன்ரரை வைச்சுத்தான் சாமியையோ சூரனையோ தூக்கப்போகினம் எண்டால், அதைக் கொஞ்சம் அமத்தி வாசிக்கோணும். ஏதோ வீரதீர சாகசங்கள் செய்யிறமாதிரி, உந்தக் குறளி வித்தையளைக் காட்டினால் கும்பிட வந்த சனத்துக்கு கடுப்பாகும் தானே. இந்தக் கூத்துகளையெல்லாம் பாக்கேக்க, சூரனும் வேண்டாம் போரும் வேண்டாம் எண்டிட்டு முருகன் தலைதெறிக்க எங்கையாவது ஓடினாலும் ஓடுவார் கண்டியளோ.

padsi@uthayan.com
- பட்சி



# இன்றைய

ராசிபலன்

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடிமுடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரவகையில் வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த முக்கியமான காரியம் ஒன்று அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளையசகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நண்பர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொண்டாலும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. மாலையில் சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சிதரும்.

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.29

சைவவாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவும், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் குருபூஜை விழாவும் தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள விழாவில் ஆன்மிக விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் திருவாளர் சமூகமாமணி கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சுவாமி விபுலானந்த அடிகளார் குருபூஜையை அடுத்து சைவப்புலவர் பிரசங்கபூஷணம் பொன். சந்திரவேல் "சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் சமயப்பணி" எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவையும், இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் தொகுப்புரையையும் ஆற்றுவர். (ச-41)




காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விரதத்தின் சூரசங்கார உற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சிறப்புற நடைபெற்றது. (ச)





மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில், கந்தசஷ்டி விரதத்தின் சூரசங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. சண்முகப் பெருமான் சிறிய தேரில் வெளிவீதியில் எழுந்தருளியதைத் தொடர்ந்து சூரசங்கார உற்சவம் இடம்பெற்றது. (க-66,17)





நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவ ஆறாம் நாளான நேற்றுமுன்தினம் முருகப் பெருமான் தேரில் ஆரோகணித்து சூரசங்காரம் இடம்பெற்றது.

தொடர்ந்து நேற்றுக் காலை தீர்த்தோற்சவம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-17)

கந்தசஷ்டித் திருவிழாவை முன்னிட்டு சூரசங்கார நிகழ்வு பருத்தித்துறை பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் கோவிலில் நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. முருகப்பெருமான் ஆட்டுக்கடா வாகனத்திலேறி வெளிவீதி உலா வந்து சூரசங்காரம் இடம்பெற்றது. (ச-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# கைபேசிச் சிறையில் இருந்து சிறார்க்கு விடுதலை

12வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கைபேசிகளைப் (ஸ்மார்ட் போன்) பயன்படுத்துவதைத் தடைசெய்வது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித் துள்ளார்.

சிறுவர்களின் வளர்ச்சியிலும், அவர்களின் மனநிலையிலும் கைபேசிகள் ஏற்படுத்திவரும் தீவிரமான தாக்கங் கள் தொடர்பாக பல ஆய்வுகள் எச்சரிக்கை மணி அடித்திருக்கும் நிலையில், அரசாங்கத்தின் இந்தச் சிந்தனை நிச்சயம் வரவேற்கத்தக்கது. ஆனால், இன்றைய உலகம் முழுக்க டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் ஆளுமையில் இயங்கும் நிலையில், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பல சவால்களைக் கொண்டது என்பதும் மறுக்கமுடியாத உண்மை.சிறுவர்களின் கைகளில் கைபேசிகள் இருப்பது பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குகின்றது. முக்கியமாக குழந்தைகளுக்குக் கவனச்சிதறலை ஏற்படுத்துவதில் கைபேசிகள் முதன்மையாக இருக்கின்றன. இது அவர்களின் கல்வித்திறனை மட்டுமல்லாது, அவர்களின் சிந்தனைத் திறனையும் வெகுவாகக் குறைக்கின்றது. கற்றல், மைதானச் செயற்பாடுகளில் இருந்து சிறார்களைத் தள்ளிவைக்கும் கைபேசிகள், ஆரோக்கியமற்ற ஒரு எதிர்காலச் சந்ததி உருவாவதற்கும் வழிகோலுகின்றது.

அதுமட்டுமல்லாது. சமூக ஊடகங்களில், இணைய விளையாட்டுகளில், தேவையற்ற காணொலிகளுக்கு அடிமையாக்கி அவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்குகின்றது. மருத்துவ ஆய்வுகளும் இதே கருத்தையே வலியுறுத்துகின்றன. கைபேசிகளின் ஒளி சிறுவர்களின் உறக்க முறையைக் குலைக்கும், கண் பார்வையைப் பாதிக்கும், மூளை வளர்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கும் என்பது பல ஆராய்ச்சிகளின் முடிவாகும். சமூக உறவுகள் குறைந்து தனிமைப்படுதல், மன அழுத்தம், மற்றும் கோபம் போன்ற மனநிலை பிரச்சினைகளும் இதன் விளைவுகளாகும். ஆனால் மறுபுறம், தற்போதைய கல்விமுறைமை கைபேசிகள் மற்றும் டிஜிற்றல் கருவிகளுடன் இணைந்துவிட்டது என்பதை மறுக்கமுடியாது. கொரோனாப் பரவலுக்குப் பின்னர் கல்வித்துறை முழுமையாக டிஜிற்றல் தளங்களுக்கு மாறியது. இலங்கையில் கல்வியுடன் கைபேசிகள் இணைந்துள்ளமைக்கான தரவுகளும் இதையே உறுதிப்படுத்துகின்றன.

கல்வி அமைச்சின் சமீபத்திய மதிப்பீட்டின்படி, 2022ஆம் ஆண்டில் 68 வீதமான மாணவர்கள் இணைய வகுப்புகளுக்காக கைபேசிகளைப் பயன்படுத்தியிருந்தனர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 54 வீதமான குடும்பங்கள் தங்களது குழந்தைகளுக்காக குறைந்தது ஒரு கைபேசியையாவது வாங்கியிருந்தனர். இத்தகைய சூழலில், சிறுவர்கள் கைபேசிகளைப் பயன்படுத்துவதை முழுமையாகத் தடைசெய்வதென்பது நடைமுறைச் சிக்கலான விடயமே.


கல்வித்துறை இதற்காக மாற்றுவழிகளை முன்வைக்காதபட்சத்தில், இந்தத் தடை கல்வி முன்னேற்றத்தைப் பாதிக்கும் விடயமாகவும் மாறிவிடக்கூடும்.அரசாங்கத்தின் இந்தச்சிந்தனை சிறப்பானது என்றாலும், அதை நடைமுறையில் கொண்டு வர சில நுணுக்கமான மாற்றுத் திட்டங்கள் அவசியம். கல்விக்காக மட்டுமே பயன்படுத்தக்கூடிய கட்டுப்படுத்தப்பட்ட கைபேசிகளை அறிமுகப்படுத்துவது போன்ற சில முன்னேற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியம். அதுமட்டுமல்லாது பெற்றோர், ஆசிரியர்கள் இணைந்து சிறுவர்களின் டிஜிற்றல் செயற்பாடுகளைக் கண்காணிக்கக்கூடிய பொறிமுறைக்கான தேடலும் அவசியமானது. சிறுவர்களின் கைகளில் கைபேசிகள் இருப்பது நிச்சயம் ஆரோக்கியமானதல்ல. ஆனால் நடைமுறைத் திட்டங்கள் இல்லாமல் வெறும் அறிவிப்புகள்மூலம் தடை விதிக்கப்படுமானால், எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை. அதனால் அரசாங்கம் அதற்கான சிறப்பான வழிமுறைகளைத் தேடவேண்டும் - கைபேசிகளின் பிடியில் இருந்து சிறுவர்களை விடுவிக்கவேண்டும்.

செய்தி : 021 493 0000 .
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

திட்டங்கள் என்பதில் எதுவும் இல்லை; திட்டமிடல் என்பதிலேயே எல்லாம் இருக்கின்றது.

– ட்வைட் டி ஐசனோவர்–



## தங்கத்தின் விலை சடுதியாகச் சரிவு!



கொழும்பு, ஒக்.29

கடந்த வாரங்களுடன் ஒப்பிடும்போது இலங்கையில் தங்கத்தின் விலை மேலும் சரிவடைந்துள்ளது.

இலங்கை தங்கச்சந்தை நிலைவரப்படி ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் விலை 322,000 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

22 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 298,000 ரூபாவாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, 22 கரட் தங்கத்தின் விலை 379,200 ரூபாவாகவும், 24 கரட் தங்கத்தின் விலை 410,000 ரூபாவாகவும் அதிகரித்திருந்தது.

சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை 4,230 அமெரிக்க டொலரை அடைந்துள்ளமையினால் தங்கத்தின் விலை கடந்த சில நாள்களாக அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தது. சமீபத்தில் ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும், தங்கம் மற்றும் வெள்ளி விலை நீண்டகாலத்துத் துத் தொடர்ந்து உயரும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## நடந்து சென்றவருக்கு எமனான பேருந்து

கொழும்பு, ஒக்.29

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நடந்து சென்றபோது மாத்தறை நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மோதியதில் விபத்து நேர்ந்துள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## ஆயுதத்தால் தாக்கி பெண் கொலை

கொழும்பு, ஒக்.29

மதவாச்சிப் பகுதியில் வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுப்பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. கொலைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச-இ)

## லசந்த கொலை சந்தேகநபர்களுக்கு தடுப்புக்காவல்



கொழும்பு, ஒக்.29

வெலிகம பிரதேசசபைத் தவிசாளர் லசந்த விக்ரமசேகரவைச் சுட்டுக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கொலைச் சம்பவத்தில் துப்பாக்கிச்சூட்டை நடத்திய நபர் மற்றும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் உட்பட ஆறு சந்தேகநபர்களையும் 72 மணிநேரம் தடுத்துவைத்து விசாரிப்பதற்குப் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மத்திய வங்கிக்கு 2 பிரதி ஆளுநர்கள்

கொழும்பு, ஒக்.29

இலங்கை மத்திய வங்கிக்கு இரண்டு புதிய பிரதி ஆளுநர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். அதன்படி, உதவி ஆளுநர் சி. அமரசேகர, மற்றும் உதவி ஆளுநர் கே. ஜி. பி. சிறிகுமார ஆகியோர் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிதியமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - ஐப்பசி 13
30.10.2025
சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம் : 01.33 - 03.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் வெற்றிடங்களில் ஊழல் செய்யாதீர்கள்!

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்

**யாழ்ப்பாணம்,ஒக்.29**

**போதனை சாரா ஊழியர்களுக்கான ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல், ஆளணிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நேற்றுச் செவ்வாய்க் கிழமை ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**




பல்கலைக்கழகப் பொது நினைவுத்தூபிக்கு அருகிலிருந்து பேரணியாகச் சென்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இதன்போது போராட்டக்காரர்கள் 'நிரந்தர வேலைவாய்ப்பை உறுதிசெய்!, நியமனங்களை வெளிப்படையாகச் செய், ஓய்வு பெற்ற ஊழியர்களைப் பழிவாங்காதே!, வெற்றிடங்களை உடன் நிரப்பு, நியமனம் வழங்குவதில் ஊழல் செய்யாதே!, பதவி உயர்விலும், படியேற்றத்திலும் காலம் தாழ்த்தாதே!, நியமனக்கடிதமின்றி நூற்றுக்கணக்கானோர் கடமையாற்றுவதா? உள்ளிட்ட சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் போராட்டத்துக்கு நேரடியாக ஆதரவு வழங்கியதுடன், ஊழியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (ச-க-66)



## நவீன சந்தைக் கட்டடத்தில் வாகனங்களால் இடையூறு!

### பருத்தித்துறை வியாபாரிகள் விசனம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத்தொகுதிக்குள், அத்துமீறி வாகனங்கள் நிறுத்தப்படுவதால். அங்குள்ள வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நவீன சந்தைக் கட்டடத்தொகுதியின் பிரதான நுழைவாயில் மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பொதுப்பாதையிலும் இவ்வாறு அத்துமீறி வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.


பருத்தித்துறை நகருக்கு வருகைதருவோர் தமது வாகனங்களை நிறுத்திவிட்டு, பல மணித்தியாலங்களுக்குப் பின்னரே மீள எடுத்துச்செல்கின்றனர். இதற்குப் பருத்தித்துறை நகரசபையால் கட்டணமும் அறவிடப்படுகின்றது. இதனால் நவீன சந்தைக் கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள பொதுப் பாதை ஊடாக, மக்கள் நடமாடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, நவீன சந்தைக் கட்டடத்தின் மேற்குப் பகுதியில் பருத்தித்துறை நகரசபையின் இருசக்கர வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றபோதிலும் இவ்வாறு கண்ட இடங்களில் வாகனங்களை நிறுத்துகின்றனர் என்றும் வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-100)

## பரிசில்நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.29

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய பரிசில்நாள் நிகழ்வு நாளை பிற்பகல் 12.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இவ்வோன் லெனின், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வர். (ச-9)



## குறும்படத் தயாரிப்பு தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு

குறும்படத் தயாரிப்புத் தொடர்பில், யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் குறும்படத்துக்குக் கதை எழுதுவது எப்படி, புகைப்படக் கருவி நுட்பங்கள் மற்றும் காணொளிச் செம்மையாக்கம், கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி குறும்படத்தை எப்படி உருவாக்குவது, செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி குறும்படங்களை எவ்வாறு தயாரிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டன.

தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையினரின் பங்கேற்புடன் இடம்பெற்ற நிகழ்வில், யாழ். மாவட்ட பாடசாலைகளில் ஊடகக் கற்கைகள், நாடகம் அரங்கியல் கற்கை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-20)

## பச்சிலைப்பள்ளி சபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு

கிளிநொச்சி,ஒக்.29

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் 2026ஆம் ஆண்டுக்கான பாதீடு மக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் 2026ஆம் ஆண்டிற்கான பாதீட்டு வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பாதீடு நேற்று ஒக்ரோபர் 28ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் தலைமை அலுவலகம், சபையின் நூலகங்கள், மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் என்பவற்றில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-113)




வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் கந்த சஷ்டி விரத நிறைவு நாளின் சூரசங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் நூற்றுக்கணக்கான அடியவர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 05 . 1956



இறப்பு 28 . 10 . 2025

## துரைசிங்கம் ஸ்ரீகாந்தன் (ஸ்ரீ)

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் துரைசிங்கம் ஸ்ரீகாந்தன் அவர்கள் (28.10.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வனும், கேசலிங்கம், காலஞ்சென்றவர்களான தாமராதேவி, சண்முகராசா மற்றும் கணேசலிங்கம் (பிரான்ஸ்). சித்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சற்குணதேவி, குமாரசாமி, றோசிலின் (பிரான்ஸ்). செல்வராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், பிரசன்னா, லக்சனா ஆகியோரின் சித்தப்பாவும், காலஞ்சென்ற சஜந்தனின் பெரியப்பாவும், துஷியந்தன் - மாலிகா (கனடா), ஜிசந்தன் - அனுசியா, சஜிதா - பிரசன்னா (பிரான்ஸ்), நிசாந்தன் - கபிலாசா (சவுதி அரேபியா), ஹரிகரன் (கனடா), ஹரிசலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹிசாந், ஆதிரா, ஆரணியா, ஜதீசன், ஜதீரன், ஜதீபன், பிரியா, அஜய், இனியா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் (29.10.2025) புதன்கிழமை காலை 09.00 மணியளவில் G.P.S வீதி கல்வியங்காட்டிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
கல்வியங்காடு. தொடர்பு - 077 616 2019



# வவுனியா மருத்துவமனைக்கு புதிய லேசர் இயந்திரங்கள்

வவுனியா, ஒக்.29

வவுனியா மாவட்ட பொதுமருத்துவமனையின் கண்பிரிவுக்கு ஆர்கன் மற்றும் யாக் என்ற புதிய லேசர் இயந்திரங்களை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சுமார் 48.4 மில்லியன் ரூபா பெறுமதியான இரு இயந்திரங்களையும் அனைத்துலக மருத்துவநல அமைப்பு கையளித்துள்ளது.

இந்த இயந்திரங்கள் நோயை இனங்காணுதல் மற்றும் சிகிச்சைத் திறன்களை அதிகரிக்கும் திறன் வாய்ந்தவையாகும். இந்த இயந்திரங்கள் நீரிழிவு மற்றும் பிற நோய்களால் கண்பார்வை இழக்கக்கூடிய நோயாளிகளைப் பூரணமாகக் குணப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. (ச-இ)

# வளர்ச்சி நோக்கி சுற்றுலாத்துறை

கொழும்பு,ஒக்.29

ஒக்ரோபர் மாதத்தில் இலங்கையின் சுற்றுலாத் துறை வளர்ச்சியைக் காட்டியுள்ளது. இந்த மாதத்தின் முதல் 26 நாள்களில் ஒரு இலட்சத்து 37,876 சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்கு வந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை 2024ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட 113,189 சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும்போது 21.8 சதவீத அதிகரிப்பாகும். அதன்படி இந்த ஆண்டு இதுவரை நாட்டுக்குவந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 1,863,370 ஆக பதிவாகியுள்ளது. (ச-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 10.02.1943

மறைவு 27.10.2025

## சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம்

குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் கடந்த 27.10.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் மனைவியும், மாணிக்கம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், உதயராணி, மோகனாராணி, காலஞ்சென்ற (பாமா) பத்மராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், வன்னியசிங்கம் அவர்களின் மாமியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பொன்னுத்துரை, இராசலிங்கம் (A.M.R) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், பொன்னுத்துரை, சுபத்திரை, மகேஸ்வரி, நேசம்மா ஆகியோரின் மைத்துனியும், ஸ்ரெனிப்பிரகாஷ் - தர்சினி, சுலக்ஸ்மன் - நிரோசினி, றொலியாஸ் - நிரஞ்சினி, சன், சுகேந்திரன் - நிரஞ்சலா ஆகியோரின் பேர்த்தியும், டிவியா, டிப்னேஸ், டிவிஷா, சயூரா, நிவிஜன், லைலா, வென், சவித், சவி (Shavi) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2025) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.
குமரகோட்டம்,
கோண்டாவில்.
T.P: 077 1248 336
W.No:076 0848 666

(CS 30638) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சடையர் லிங்கநாதன்

**(ஜி.எஸ் லிங்கநாதன் றெக்ஸ்ரைல்ஸ் - உரிமையாளர்
இல.51 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்)**

இல.54 முதலி கோவிலடி கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சடையர் லிங்கநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (27.10.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடையர் - தையல்நாயகி தம்பதியரின் மகனும், ஞானரஞ்சிதத்தின் கணவரும், கார்த்திகா, உமாசங்கர், அபிநந், ஆரணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (30.10.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்வு 06.10.1952 | உதிர்வு 27.10.2025

இல. 54, முதலிகோவில் 2வது ஒழுங்கை
(Church Lane) தாவடி,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்
077 136 3330
077 666 8107

(CS/59469) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 12 . 1952

மறைவு 21 . 10 . 2025



## யோகராஜா புவனேஸ்வரி

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா புவனேஸ்வரி அவர்கள் கடந்த (21.10.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இராசாத்தியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் யோகராஜாவின் அன்பு மனைவியும், சோதிநாதனின் (UK) மைத்துனியும், இந்திராணியின் சகோதரியும், புவனராஜன் (USA), புஸ்பராஜன் (UK), திலகராஜன் (Newziland), கோகுலராஜன் (Canada), கிருஸ்ணராஜன் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லொசானி, வத்சலா, ஜீவமனோ, சாமினி, துவாரகா ஆகியோரின் அன்பு மாமியும், ஹர்சன், சியாம், அபர்னா, சௌபர்ணிகா, ரிஷிடரன், ரிஸ்னிகா, கேசிகா, தேனுகா, தேஸ்விகா, சந்தோஷ், லக்ஷியா, அஸ்வின்ந், யசிகா, ஆத்விகன், ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல.20, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) என்னும் இடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

20, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
0044 758 547 3461
சுரேஸ் (மகன்) - 077 4019 766

(CS/30635) J-1

## பகிரங்க கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சத்தியக்காட்டு சந்தையின் 47' X 55' விஸ்தீரணம் கொண்ட பழைய கட்டித்தின் நிலமட்டத்திற்கு மேல் பகுதியினை (Earth Level) இடித்து அப்புறப்படுத்தலுக்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்.

தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் அவர்களினால் பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்வி மனு கோரப்படுகிறது.

1. ஏலவிற்பனை பெறுகைகள் முறைக்கு அமைவாக இடம்பெறும்.
2. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 29.10.2025ம் திகதியிலிருந்து 04.11.2025 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 03.00 வரை.
   கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 06.11.2025 மு.ப. 10.00 மணி
   கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 06.11.2025 மு.ப. 10.00 மணி
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2025.10.29 ஆம் திகதியிலிருந்து 04.11.2025 ஆம் திகதி வரை மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 03.00 மணிக்கும் இடையில் குறித்த கட்டிடத்தை பார்வையிட முடியும் என்பதுடன் அதே காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணமாக ரூபா 50,000.00 இனையும் மீளளிக்கபடாத பணமாக ரூபா 1,000.00 ஐயும் தலைமை அலுவலகத்தில் காசாக செலுத்தி கேள்வி படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் ரூபா 1,000.00 பெறுமதியான பற்றுச்சீட்டினை இணைத்து தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சத்தியக்காட்டு பழைய மரக்கறி சந்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கான கேள்வி"** என தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.
5. அதிகூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர் 2025.11.07ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்குள் அத்தொகையினை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் முழுமையாக ஒரே தடவையில் காசாக செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு 2025.11.11ம் திகதிக்குள் குறித்த கட்டிடத்தின் நிலமட்டத்திற்கு மேல் பகுதியினை இடித்து குறித்த சந்தை வளாகத்திலிருந்து அகற்றப்பட்டிருத்தல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் உரிய முறையில் இடித்து அகற்ற தவறுவாராயின் வைப்பு பணத்தினை மீளப்பெற முடியாது என்பதுடன் கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் பெறுகைக் குழுவுக்கு உரியதாகும் என்பதுடன் கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

தலைவர்,
பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.
(தொ.பே.இல. 0212250144)

2025.10.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாடாளுமன்றக் குழு பிரிட்டனுக்குப் பயணம்

லண்டன்,ஒக்.29

இலங்கை நாடாளுமன்றத்தின் உயர்நிலைக் குழுவொன்று இவ்வாரம் நான்கு நாள் பயணம் மேற்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்றுள்ளது.

இந்தப் பயணம் Westminster Foundation for Democracy (WFD) அமைப்பின் ஒருங்கிணைப்பில், பிரித்தானிய சர்வதேச அபிவிருத்திப் பிரிவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிப்படைத் தன்மை, பொறுப்புணர்வு மற்றும் சிறந்த சட்டமன்ற நடைமுறைகளை வலுப்படுத்துவது இந்தப் பயணத்தின் நோக்காக அமைந்துள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் நாடாளுமன்ற சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, மகளிர் மற்றும் குழந்தைகள் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், மற்றும் நாடாளுமன்ற உதவிச் செயலாளர் ஜெனரல் ஹன்சா அபேரத்ன ஆகியோர் பங்கேற்றனர். (ச-125)

# பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம்; உறுதிமொழியை நிறைவேற்றுக

### எதிர்க்கட்சி வலியுறுத்து



கொழும்பு, ஒக்.29

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என வழங்கப்பட்ட உறுதிமொழியை விரைவில் நிறைவேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான சுஜீன சேனசிங்க தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும். அதுவரையில் தடுப்புக் காவல் உத்தரவைப் பெறுவதும் நிறுத்தப்பட வேண்டும்.

கடந்தகாலங்களில் அரசியல் பழிவாங்கலுக்கே இந்த ஏற்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ஸ்மார்ட் வகுப்பறைக்கு அடிக்கல் நடல்

வவுனியா, ஒக்.29

வவுனியா பாவற்குளம் அரசடிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறைக் கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டதுடன் மைதானப் புனரமைப்புப் பணியும் ஆரம்பித்துவைக்கப்பட்டது. குறித்த வேலைத்திட்டங்கள் தேசியமக்கள் சக்தியின் செட்டிகுளம் பிரதேசசபை உறுப்பினர் இசையாஸ்மிராலின் வேண்டுகோளுக்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனின் குறித்தொதுக்கப்பட்ட 23 இலட்சம் ரூபா நிதியில் மேற்கொள்ளப்படவுள்ளது. (ச-110)




**பிறப்பு சான்றிதழில் பெயர் உள்ளடக்கம்**

கோயிற் சந்தை துன்னாலை மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த சீனியர் குலேந்திரம் என்கின்ற எனது பெயரானது பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் (6331 இலக்கம்) கூடு 2ல் பதிவு செய்யப்படவில்லை. எனவே இன்று முதல் சீனியர் குலேந்திரம் எனப் பதிவு செய்து கொள்கின்றேன் என இலங்கை குடியரசு மக்களிற்கு அறியத் தருகின்றேன்.
உண்மையுள்ள - குலேந்திரம்
(CS/30430) J-1

**பெண் பணியாள் தேவை**

அச்சுவேலியில் அமைந்துள்ள வீடொன்றினைப் பராமரிப்பதற்கு பெண் பணியாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
Whatsapp:- +47 967 17250
(CS/59749) J-1

PFRC
இந்தியாவின் புகழ்பெற்ற பிரசாந்த் கருத்தரிப்பு ஆராய்ச்சி மையம்
இப்போது இலங்கையில்!
6,000+ குழந்தைகள் பிரசவம்
ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் பெற்றோராகப் பெருமிதம்!
அதிநவீன கருத்தரிப்பு சிகிச்சைகளுடன்
RPFC ரோயல் பிரசாந்த் கருத்தரிப்பு மையத்தின் பிரம்மாண்ட திறப்பு விழாவில் எங்களுடன் இணையுங்கள்!
அக்டோபர் 31, 2025 வெள்ளிக்கிழமை
இலவச கருத்தரிப்பு ஆலோசனை முகாம்
அக்டோபர் 31 மற்றும் நவம்பர் 1, 2025
இடம்: ரோயல் பிரசாந்த் மருத்துவமனை
நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
IUI | IVF | ICSI | IMSI
அனைத்து சிகிச்சைகளும் ஒரே கூரையின் கீழ்
ஆரம்ப விழாவை முன்னிட்டு சிறப்பு சலுகைகள்!
பதிவு செய்ய, அழைக்கவும்: 0777 21 55 88
62, W.A.Silva Mawatha, Wellawatte www.pfrcivf.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
## சந்தைகள், கோழி இறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழி இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு **2026.01.01** ஆம் திகதி தொடக்கம் **2026.12.31** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** | :- 2025.10.29 - 2025.11.11 | பிற்பகல் 03.00 மணி வரை |
| **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி** | :- 2025.11.12 | மு.ப 10.00 மணி வரை |
| **கேள்விதிறக்கும் திகதி** | :- 2025.11.12 | மு.ப 10.00 மணி |
| **கேள்வி பத்திரம் திறக்கும் இடம்** | :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம் | |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, இணைப்பிரதி உட்பட இரு பிரதிகளையும் **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு 12.11.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம்முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கபெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு

1. கேள்விப் பத்திரம் /பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **அடையாள அட்டை**யையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் **வதிவிடச் சான்றிதழையும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபை தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் $^1/_3$ பகுதியை **2025 நவம்பர் 19 ஆம் திகதி** பி.ப 3.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
7. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
8. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும். பொதுசுகாதார பரிசோதகரது அறிவுறுத்தலை கடைப்பிடித்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
9. **சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன், இறால், நண்டு, கணவாய் கிலோ ஒன்றிற்கு ரூபா 10.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் மரக்கறிச் சந்தையில் விற்பனை செய்யும் 5' நீளம் கொண்ட முகப்புக்கு ரூபா 125.00 உம் மீன் வெட்டும் இடம் ஊடு ஒன்றிற்கு (5'X 3') ரூபா 150.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 20.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது. பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை தரகுக்கட்டண நடைமுறை என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.**
10. **பொதுமலசலகூடத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணம் ரூபா 20.00 ற்கு மேல் வரி அறவிடமுடியாது.**
11. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம்" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும்.
12. பின்வரும் சந்தைகளைக் குத்தகைக்கு எடுக்கும் குத்தகைக்காரர்கள் மாதாந்தம் நிலையான மின்சாரக்கட்டணமாக கீழ்வரும் விபரப்படி மாதாந்தக்குத்தகையுடன் செலுத்துதல் வேண்டும். சங்கானை மரக்கறிச்சந்தை-15,000.00, சங்கானை மீன் சந்தை-3,000.00, சங்கானை மாட்டிறைச்சிக் கடை - 2,000.00 சத்தியக்காட்டுச்சந்தை 2,000.00. சத்தியக்காட்டுச்சந்தை கருவாட்டுக்கடை – 750.00, சத்தியக்காட்டுச்சந்தை கோழிஇறைச்சிக்கடை – 750.00
13. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
15. மூளாய் சந்தையினை குத்தகைக்கு எடுப்பவர் 01.01.2026 முதல் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு குறித்த சந்தையின் மீன்வியாபாரிகளிடமிருந்து இவ் விளம்பரத்தின் பிரகாரம் கட்டணத்தை அறவிடமுடியும். கோழி இறைச்சி கடையை தமது செலவில் சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலுக்கு அமைவாக அமைத்து கோழி இறைச்சியினை விற்பனை செய்ய முடியும்.
16. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
17. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

**சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான**
**குத்தகை அட்டவணை – 2026**

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| **சங்கானை உப அலுவலகம்** | | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை | — | 24,810,000.00 | 496,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை மீன் சந்தை | — | 4,290,000.00 | 85,800.00 | 1,000.00 |
| 03 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 99,385.00 | 2,000.00 | 1,000.00 |
| 04 | சங்கானை கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 693,000.00 | 13,860.00 | 1,000.00 |
| 05 | சங்கானை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 2,207,700.00 | 44,100.00 | 1,000.00 |
| 06 | மீன் சந்தை வாகன தரிப்பிட குத்தகை | 1,500.00 | 1,045,000.00 | 20,900.00 | 1,000.00 |
| 07 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 01 | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 02 | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 09 | சங்கானை பஸ்தரிப்பிட பொது மலசலகூடம் | | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | | |
| 01 | சத்தியக்காட்டுச் சந்தை (மரக்கறிச் சந்தை மீன் சந்தை வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக) | - | 3,979,360.00 | 79,580.00 | 1,000.00 |
| 03 | சத்தியகாடு சந்தை கருவாட்டுக் கடை | 1300.00 | 70,125.00 | 1,400.00 | 1,000.00 |
| 04 | சத்தியக்காட்டுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1300.00 | 486,312.00 | 9,720.00 | 1,000.00 |
| 05 | பொன்னாலை வாராந்தச் சந்தை | | 52,305.00 | 1,040.00 | 1,000.00 |
| 06 | மூளாய் மீன் சந்தை (கோழி இறைச்சி கடை உட்பட) | | 133,100.00 | 2,660.00 | 1,000.00 |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | ----- | 528,561.00 | 10,570.00 | 1,000.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | ------ | 88,000.00 | 1,760.00 | 1,000.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை | 1,750.00 | 412,500.00 | 8,250.00 | 1,000.00 |
| 04 | சங்கரத்தை மாட்டு இறைச்சிக்கடை | 1,750.00 | 632,500.00 | 12,650.00 | 1,000.00 |
| **அராலி உப அலுவலகம்** | | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | ----- | 34,705.00 | 1,000.00 | 1,000.00 |

தலைவர்
பெறுகைக்குழு
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.
சுழிபுரம்.

29.10.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வருமான வரி பில்லியன் ரூபா குவிப்பு

கொழும்பு,ஒக்.29

இலங்கையின் வரி வருமானம் இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில், முந்தைய ஆண்டைவிட 32.5 வீதமாக அதிகரித்துள்ளது.

சுங்கத்துறைமூலம் இறக்குமதிக் கான மதிப்புக் கூட்டுவரி மற்றும் உள் நாட்டு உற்பத்தி வரிமூலம் வரலாறு காணாத வரி வசூலே இந்த அதிகரிப் புக்குப் பிரதான காரணம் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் இறுதிக்குள் வரி வருமா னம்32.5வீதம்அதிகரித்துரூ.3,563 பில்லியனாக உயர்ந்துள்ளது. முதன்மை வரி ரூ.1,465 பில்லிய னாக உயர்ந்துள்ளது. 2024 உடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதி வரி 42 வீதம் அதிகரித்து ரூ.605 பில்லி யனாக உயர்ந்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தி வரி 94 வீதம் அதிகரித்து ரூ.552 பில்லியனாக உயர்ந்துள்ளது. மோட்டார் வாகனங் களுக்கான உள்நாட்டு உற்பத்தி வரி ரூ.311 பில்லியனில் இருந்து ரூ.349 பில்லியனாக குறிப்பிடத்தக்க அள வில் அதிகரித்துள்ளது. வருமான வரி 11.9 வீதம் அதிகரித்து ரூ.831 பில்லியனாக உயர்ந்துள்ளது.

மூலதனச் செலவு மற்றும் நிகர கடன் 2 வீதம் குறைந்து ரூ.455 பில்லிய னாக உள்ளது. மொத்த வட்டிச் செலுத்தல்கள் செப்ரெம்பர் இறுதிக் குள் 8.6 வீதம் அதிகரித்து ரூ.1,907 பில்லியனாக உயர்ந்துள்ளது என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)





வவுனியா கந்தசுவாமி ஆலய கந்த சஷ்டி உற்சவ சூரசங்ஹாரம் நேற்று முன்தினம் அடியவர்கள் சூழ பக்திபூர் வமாக நடைபெற்றது. (ச)

புதன் பொய்கை

29.10.2025
புதன்கிழமை

வளர்ச்சிக்கான வலிமையான கொள்கை மனிதனின் தேர்விலேயே இருக்கின்றது.
- ஜோர்ஜ் எலியட்

■ மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை மற்றும்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மருத்துவபீடம் யாழ்ப்பாணம்

## பிறந்த குழந்தைகளிலும் சிறுவர்களிலும் ஏற்படும்

# குடலிறக்கமும் அதன் ஆபத்தும்



பிறந்த குழந்தைகள், சிறுவர்களில் ஏற்படும் பொதுவான குடலிறக்கங்களில் இங்குனைல் ஹெர்னியா எனப்படும் குடலிறக்கம் என்பது அவதானமாக இருக்கவேண்டியதும் சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தக்கூடியதுமான நோய் நிலைமை ஆகும்.

இங்குனைல் ஹெர்னியா என்பது அடிவயிற்றுப் பகுதியில் உள்ள பலவீனமான இடத்தின் வழியாக குடல் மற்றும் உள் உறுப்புகள் வெளியேறி ஒரு மென்மையான வீக்கமாக வெளிப்படும் நிலைமை ஆகும்.

இந்த ஹெர்னியா பெரும்பாலும் பிறவியிலேயே உள்ள வளர்ச்சிக் குறைபாடுகளால் ஏற்படுகின்றது. கருப்பையில் வளரும்போது, ஆண் குழந்தைகளின் விதை வயிற்றிலிருந்து கீழே வரும்போது ஒரு இங்குனைல் கால்வாய் வழியாகப் பயணிக்கின்றது. பிறப்பிற்கு பிறகு இந்த கால்வாய் மூடப்படவேண்டும். ஆனால் சில பிள்ளைகளில் இது திறந்தே இருக்கும். இதன்மூலம் வயிற்றில் உள்ள உறுப்புகள் வெளியே தள்ளப்படும். இது ஆண் குழந்தைகளில் அதிகம் ஏற்படும். மேலும் குடும்பமரபு வழியாகவும், குறை மாதத்தில் பிறந்த குழந்தைகளிலும் அதிகமாக ஏற்பட வாய்ப்புண்டு.

### அறிகுறிகள்


அழும்போது, சிரிக்கும்போது, இருமும்போது வீக்கத்தின் அளவு அதிகரிப்பதை வைத்து உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும். ஆரம்பத்தில் வலி இல்லாமல் இருக்கலாம், பின்னர் குழந்தை வலி தாங்காமல் அழவும் வாய்ப்புள்ளது.

### சிகிச்சை முறைகள்

இது சிகிச்சை தேவைப்படும், தானாகக் குணமாகாத ஒரு நோய் நிலைமை ஆகும். மிக வும் அனுபவம் உள்ள குழந்தை சத்திரசிகிச்சை நிபுணர்களால் சாதாரண உடற் பரிசோதனைமூலம் கண்டுபிடிக்கப்படக்கூடிய நோய் நிலைமை. மேலதிகமாக அல்ட்ராசவுண்ட ஸ்கான் பரிசோதனைகள் மேற் கொள்ளுவார்கள்.

இதன் சிகிச்சை குறுகியநேர சத்திர சிகிச்சை ஆகும். இது குழந்தை சத்திர சிகிச்சை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் மயக்க மருந்து கொடுத்துச் செய்யப்படும் சத்திரசிகிச்சை ஆகும். இது விரைவாக வீடு திரும்பக்கூடியது, குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் 100 வீதம் குணப்படுத்தப்படுகிறார்கள். சிகிச்சைக்குப் பின்; போதுமான ஓய்வு அல்லது பரசிட்டமோல் போதுமானதாக இருக்கும்.

> பெற்றோர் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் அடிவயிற்றுப் பகுதியில் வீக்கம் அல்லது மாற்றம் எதையும் காணும் போது அதை அஜாக்கிரதையாக விடாமல் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும். தாமதம் செய்தால் உயிருக்குக்கூட ஆபத்து ஏற்படலாம்.



### மருத்துவ அவசர நிலை

சில நேரங்களில் குடற்பகுதி உட்செல்லமுடியாமல் சிக்குப்படுவதால்; குடலுக்குச் செல்லும் இரத்த ஓட்டமானது குறைந்துவிடும். இது ஒரு மருத்துவ அவசர நிலையாகும். இதற்கான அறிகுறிகளாவன:

- தாங்க முடியாத வலி / குழந்தை தொடர்ச்சியாக அழுதல் /உறக்கமின்மை
- வாந்தி
- காய்ச்சல்
- மலம் கழிக்கமுடியாத நிலை
- வயிறு வீங்கியிருத்தல்

இந்தநிலைமையில் உடனடியாக மருத்துவரை நாடவேண்டும். எனவே பெற்றோர் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் அடிவயிற்றுப் பகுதியில் வீக்கம் அல்லது மாற்றம் எதையும் காணும்போது அதை அஜாக்கிரதையாக விடாமல் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவேண்டும்.

தாமதம் செய்தால் குழந்தையின் குடற்பகுதிக்கு இரத்த ஓட்டமின்றிப் பழுதடைவதால் உயிருக்குக்கூட ஆபத்து ஏற்படலாம். எனவே பெற்றோர் இந்த இங்குனைல் ஹெர்னியா நோய் தொடர்பில் விழிப்புடன் இருக்கவேண்டும். ■

# தமிழ் – சிங்களப் பாடல்



எனது தமிழ் நிலவு
எப்போது வருவாய் ?...
நான் தாழ் நாடு தாழ்ந்த நிலத்தில்
இருக்கிறேன் ...
இழுத்திழுத்துக் கதைக்கின்ற
சிங்களமே எனக்குத் தெரியும் ....
நீ பனையோலையில் எங்கே இருக்கிறாய்
எனது தமிழ் நிலவு
எப்போது வருவாய்? ...

தென்னம் பூவில் சாய்ந்து
மலர்ச்செடியில் அலங்கரித்து
நான்
கோவில் வாசனைப்
புகையை முகர்ந்தேன்
யாழ் தேவியே
உனக்குத் தெரியுமா?...

பன்பாய் விரித்து
பொரி முத்துகள் விதைத்து
நெற்றி மத்தியில் சிகப்பு நிறத்து
திலகம் இட்டேன் நான்
யாழ் தேவியே
உனக்குத் தெரியுமா?...
எனது தமிழ் நிலவு
எப்போது வருவாய் ?...
நான் தாழ் நாடு
தாழ்ந்த நிலத்தில்
இருக்கிறேன் ...

**சிங்களத்தில் : அதுல ஜயதேவ**
**தமிழில் : இப்னு அஸூமத்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கிளிநொச்சியில் சிறப்புற்ற பண்பாட்டுப் பெருவிழா



இரா.நிஷாந்தன்
தமிழாசிரியர்
கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய மாபெரும் பண்பாட்டுப் பெருவிழா கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைமடு நெலும் பியச தாமரைத்தடாக மண்டபத்தில் மிகு சிறப்பாக இடம்பெற்றது. பாரம்பரிய இன்னிய இசையுடன் கூடிய தமிழர் பண்பாட்டு மரபுகளை சுமந்தவாறான கலை அம்சங்களுடன் மங்கல இசை முழங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

### விருந்தினராய் வந்தோர்

கிளிநொச்சி மாவட்டச் செயலரும், மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான சு.முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக, கடற்றொழில் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்து மாண்பினைச் சேர்த்தனர். சிறப்பு விருந்தினர்களாக வடக்குமாகாணப் பண்பட்டாலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி தர்சினி நிதர்சன், கிளிநொச்சி கல்வி வலய முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேல் ஆகியோர் சிறப்புச் சேர்த்திருந்தனர். மேலும் கௌரவ விருந்தினர்களாக கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச கலாசாரப் பேரவையின் உறுப்பினர்களான, 'கலைக்கிளி' வேலுப்பிள்ளை சௌந்தரராசா மற்றும் 'கலாபூஷணம்' சண்முகம் இரத்தினேஸ்வரன் மற்றும் 'கலைக்கிளி' மயில்வாகனன் வேலாயுதபிள்ளை மற்றும் 'கலாபூஷணம் கந்தையா ஆறுமுகம் ஆகியோர் அணி சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### கண்ணைக் கவர்ந்த கலைநிகழ்வுகள்

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள கலாமன்றங்கள் மற்றும் பாடசாலைகளின் மாணவர்களும், கலைஞர்களும் இணைந்து வழங்கிய நடன ஆற்றுகைகள் பலவும் கண்களுக்கு விருந்தளித்தன. தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம் முதலாக சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களை முதன்மைப்படுத்தும் வகையில் கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தமையும் சிறப்பாக நோக்கத்தக்கது. அரங்கில் நிகழ்ந்த அத்தனை கலைநிகழ்வுகளும் பார்வையாளர்களை ஈர்த்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்தியிருந்தன.

### அணிசெய்த விருதுகள்

கலை இலக்கியத்துறையில் பயணித்து தம் திறமைகளை வெளிக்காட்டி வருகின்ற கலைஞர்களை கௌரவப்படுத்தும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களுக்கான 'இளங்கலைஞர் விருது' மற்றும் 'கலைக்கிளி விருது' என்பன வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. அவ்வகையில் இளங்கலைஞர் விருது பெற்றோர் வரிசையில், பொன்னையா சுரேந்திரன் (நாடகம்) பரஞ்சோதி விமல்ராஜ் (இசை) சரணீதரன் சரண்யா (நடனம்) தெய்வேந்திரம் விநோத் (குறும்படம்) யோகநாதன் தர்சன் (நாடகம்) ஆகியோர் சிறப்புப் பெற்றிருந்தனர். மேலும் 'கலைக்கிளி' விருது பெற்றோர் வரிசையில், ஆண்டி வேலு (கிராமியக்கலை) அந்தோனிப்பிள்ளை மங்களராசா (இலக்கியம்) பொன்னையா உதயகுமார் (இசைநாடகம்) இராசா தியாகராசா (வாத்தியக்கலை) மாதர் சுப்பிரமணியம் (நாட்டுக்கூத்து) அவுறாம்பிள்ளை சின்னப்பர் (நாட்டுக்கூத்து) அப்புக்குட்டி ஐயம்பிள்ளை (கவிதை) ஆகியோர் கௌரவத்தினைப் பெற்றிருந்தனர்.

### நூல் வெளியீடு

பண்பாட்டுப் பெருவிழாவில் சிறப்பம்சமாக 'தமிழமுதம்' தமிழ்ப் பணிக்குழுவினரால் 46 ஆயிரம் தமிழ்ப்பெயர்களின் தொகுப்பு நூலாக வெளியீடு செய்யப்பட்டிருந்தது. தமிழ்ப்பெயர் சூட்டித் தமிழராய் வாழ்வோம் எனும் தொனிப்பொருளுக்கு அமைய தமிழராய் பிறந்த ஒவ்வொருவரின் அடையாளமாக விளங்கும் பெயரினை தமிழில் சூட்டி பெருமை கொள்ள வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாக அமைவதை இந் நூல் வெளியீடு எடுத்துரைத்திருந்தது.

### இணையத்தள அறிமுகம்

கிளிநொச்சி மாவட்டத்தின் கலை, கலாசாரம் மற்றும் ஆன்மிகம் சார்ந்த தரவுகள் மற்றும் தகவல்களை ஆவணப்படுத்தும் வகையில் மாவட்டச் செயலகத்திலுடைய உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்த இணையத்தளமானது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சமய வழிபாட்டுத் தலங்கள், கலைஞர்கள் பற்றிய தரவுகள், கலாமன்றங்களின் விபரங்கள், பாரம்பரிய உணவுகளின் செயன்முறைகள் எனப் பல்வேறு தகவல்களை உள்ளடக்கியதாக அமையப்பெற்றுள்ளது.

### சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு

கலாசார அலுவல்கள் திணைக்களம், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துடன் இணைந்து நடாத்திய தேசிய கலை, இலக்கியப் போட்டிகளில் மாவட்ட ரீதியில் வெற்றிவாகை சூடியவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில் வழங்கும் செயற்பாடும் மற்றோர் அங்கமாக பண்பாட்டுப் பெருவிழாவில் அமைவுற்றிருந்தது. மாணவர்களுக்கான போட்டிப் பிரிவில் வெற்றிபெற்ற மாணவர்கள் மற்றும் திறந்த போட்டிப் பிரிவில் வெற்றிபெற்ற படைப்பாளிகள் என பலரும் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். மேலும் கிளிநொச்சி மாவட்ட கலாமன்றங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தன.

தமிழர் தம் பண்பாட்டு மரபுகளையும், கலாசார விழுமியங்களையும் என்றும் போற்றிப் பேண வேண்டிய கடமையும், பொறுப்பும் எம்மிடம் உள்ளது. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற இப்பண்பாட்டுப் பெருவிழாவில் மாணவர் முதல் பெரியோர் வரையாக பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தமையும் சிறப்பான ஓர் அம்சமாகும். உண்மையில் எம் இளம் சந்ததியினருக்கு பண்பாட்டு விழுமியங்களை நாம் கற்றுக்கொடுக்க வேண்டியதும், அவற்றை அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கச் செய்வதும் எம் கடமையாகும். அவ்வகையில் கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பெருவிழா அதனைப் பறைசாற்றும் வகையில் சிறப்புற்றிருந்தமை நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன அங்கீகாரமும் இலங்கையின் வெளிப்பாடும்!




■ ஜிந்துஜா விஜயகுமார்

தற்போது சர்வதேச அரசியலில் அதிகம் பேசுபொருளாகியிருக்கின்ற விடயமாக பலஸ்தீனத்தின் தனிநாடு தொடர்பான அங்கீகாரம் காணப்படுகின்றது. பலஸ்தீனத்தைத் தனி நாடாக அங்கீகரிப்பது என்பது, அதன் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய சர்வதேச அரசியல் நகர்வாகும். இந்தச் செயற்பாடானது இஸ்ரேல் பலஸ்தீன மோதலில், 'இருஅரசுதீர்வு' என்ற கருத்தாக்கத்தை நோக்கி உலக நாடுகள் நகர்வதைக் காட்டுகிறது. இந்த அங்கீகாரம், மத்திய கிழக்கின் அமைதியிலும், ஐ.நா.சபையின் உறுப்புரிமையிலும், சர்வதேச சட்டத்தின் நிலைப்பாட்டிலும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகளவில் 193 நாடுகள் பலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரித்துள்ளன. இலங்கையும் பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரித்த நாடுகளின் வரிசையில் உள்ளது. இலங்கையின் பலஸ்தீன ஆதரவுக்கொள்கையானது, அதன் வெளிவிவகாரக் கொள்கையில் பாராட்டுக்குரிய நிலைப்பாடாக இருந்தாலும், அதன் உள்நாட்டுக் கொள்கையுடன் ஒப்பிடுகையில் சில விமர்சனங்களுக்கு உட்படுகின்றது.

காஸாவில் இஸ்ரேல் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் கொடூரங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் நாடுகள் என்ற வரிசையில் ஐ.நா.வின் 193 உறுப்பு நாடுகளில் ஏறத்தாழ 75 வீதமான நாடுகள் காணப்டுகின்றன, அதாவது சுமார் 140 இற்கும் மேற்பட்ட நாடுகள் பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளன. இதில் சீனா, ரஷ்யா, இந்தியா போன்ற முக்கியமான நாடுகளும் அடங்குகின்றன. அண்மையில் இணைந்துகொண்ட நாடுகள் என்ற வரிசையில், பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகளின் ஆதரவும் அடங்கும். இந்த அங்கீகாரம், உலகளாவிய நீதி மற்றும் மனித உரிமைக்கான நிலைப்பாடாகப் பார்க்கப்படுகிறது.



ஐ.நா. பொதுச்சபை மற்றும் பிற சர்வதேச மன்றங்களில், பலஸ்தீன மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை மற்றும் கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக்கொண்ட ஒரு தனி நாடு அமைவதற்கான தீர்மானங்களுக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவா வாக்களித்து வருகிறது. இவ்வாறான செயற்பாடுகள்மூலம் காலனித்துவத்தின் விளைவுகளை அனுபவித்த ஒரு நாடாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்கும் பரந்த ஆசியஆபிரிக்க ஒற்றுமை நிலைப்பாட்டை இலங்கை பின்பற்றுகிறது. இதுமாத்திரமின்றி இலங்கை இஸ்ரேலுடன் முழு இராஜதந்திர உறவுகளையும் பேணிவருகிறது. பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் விவசாயத்துறைகளில் இஸ்ரேலுடன் உறவுகொள்வது இலங்கையின் பொருளாதார மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கு அவசியமாகிறது. இவ்வாறிருக்க, பலஸ்தீனத்திற்கு உணர்வுபூர்வமான மற்றும் அரசியல் ஆதரவை அளிக்கும் அதே வேளையில், இஸ்ரேலுடன் ஆயுதங்கள் போன்ற மூலோபாய ரீதியான வர்த்தக உறவைப் பேணுவது என்பது, இலங்கையின் கொள்கை ரீதியிலான இருதரப்பு விடயமாக பார்க்கப்படலாம். இது ஒருபுறம் தார்மீக நிலைப்பாட்டையும், மறுபுறம் புவிசார் அரசியல் தேவைகளையும் சமநிலைப்படுத்துவதற்கான போராட்டத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறாக இலங்கையின் பலஸ்தீன ஆதரவுக் கொள்கையானது, பாராட்டுக்குரிய நிலைப்பாடாக இருந்தபோதும், அதன் உள்நாட்டுக் கொள்கையோடு ஒப்பிடுகையில் சில விமர்சனங்களுக்கு உள்ளாகிறது. அதாவது இலங்கை, சர்வதேச அளவில் பலஸ்தீன மக்களுக்கு உரிமைக்காக பேசுவதையும், இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டிப்பதையும் அதன் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியமான அம்சமாகக் கொண்டுள்ளது. ஆனால், இலங்கையில் தமிழர்களின் உரிமைப் போராட்டங்கள் மற்றும் யுத்த கால மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச சமூகம் எழுப்புகின்ற கேள்விகளை 'உள்நாட்டுப் பிரச்சினை' எனக்கூறி மறுத்து வருகின்றது. 'தேசிய இறையாண்மை' என்ற போர்வைக்குள் உள்நாட்டு உரிமைகளை மறுப்பவர்கள், அதே 'சுயநிர்ணய உரிமை' என்ற தத்துவத்தை மற்றொரு நாட்டுக்காக வாதாடுவது என்ற அரசியல் ரீதியான இரட்டை நிலைப்பாட்டைக் காட்டி நிற்கின்றது. அதுமாத்திரமின்றி, இந்த முரண்பாடு இலங்கையின் சர்வதேச நம்பகத்தன்மையைச் சவாலுக்குள்ளாக்குகிறது.


# மனமே எம்மை இயக்கும் கருவி

## அதைத் துருப்பிடிக்க விடாதீர்

■ ஜனுஷியா ஜெயரூபன்

மனம் என்பது ஓர் அற்புத சக்திவாய்ந்தது. அதை நீங்கள் காண முடியாது, தொடமுடியாது, ஆனால் அது உடைந்ததை உணர முடியும். உடலில் ஏதேனும் வலி தோன்றும்போது, உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைபெற பெரும் செலவுகளை மேற்கொள்கிறோம். ஆனால் மனம் சோர்வடைந்தால், விரக்தியாக அல்லது தளர்ச்சியாக உணர்ந்தால், அதனை அப்படியே புறக்கணித்து விடுகிறோம். காரணம், அந்த உணர்வுகளைச் சொற்களால் வெளிப்படுத்துவதில் எமக்குச் சிரமம் உள்ளது. மேலும், இவ்வாறு உணர்வது சாதாரணம் என்ற எண்ணத்தாலும், அதைச் சகித்துக் கட்டுப்படுத்திக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையாலும், நாம் பெரும்பாலும் உதவியை நாடத் தவறுகின்றோம்.

எமது மனம்தான் நாம் செய்யும் ஒவ்வொரு செயலின் கட்டுப்பாட்டு மையம். காலை உணவைத் தேர்ந்தெடுப்பது முதல் தினசரி வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பது வரை, அனைத்தும் எமது மன எண்ணத்திலிருந்தே தொடங்குகின்றன. இருப்பினும், நாம் உடல்நலனுக்கு அதிக கவனம் கொடுத்து, மனநலனைப் புறக்கணிக்கிறோம். ஆனால் கடினமான நாள்களில் படுக்கையிலிருந்து எழுவதற்குத் தேவையான மனவலிமை மற்றும் மனநல ஆரோக்கியம் பற்றிச் சிந்திப்பதில்லை.




மனமும் உடலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இவை ஒன்றோடு ஒன்று மிக ஆழமாக இணைந்தவை. மன அழுத்தம் இரத்த அழுத்தத்தை உயர்த்தும். பதட்டம் தூக்கத்தைக் கெடுக்கும். மனச்சோர்வு நோயெதிர்ப்பு சக்தியை குறைக்கும். மற்றொரு வார்த்தையில் கூறினால், மனதைப் புறக்கணிப்பது உடலையும் பாதிக்கும். உலக சுகாதார நிறுவனம் ஆரோக்கியத்தை 'முழுமையான உடல், மன, சமூக நலன்' என்று வரையறுக்கிறது. இது மனநல ஆரோக்கியம் எந்த அளவிற்கு முக்கியமான இடத்தை பெறுகின்றது என்பதைக் குறிக்கின்றது. ஆனால் நம் சமூகம் இன்னும் மனநலனைப் பற்றிப் பேச அஞ்சுகிறது. மனநல மருத்துவரை அணுகுவது ஒரு 'பலவீனம்' என்று தவறாக நினைக்கிறோம். உண்மையில், அது பலவீனம் அல்ல அது உங்களைக் காப்பாற்றும் ஓர் அற்புத சக்தி.

மனதைப் பராமரிப்பது அவசியம். தசைகளை வலுப்படுத்த உடற்பயிற்சி செய்வது போலவே, ஓய்வு, சமூக உறவுகள், விழிப்புணர்வு, மற்றும் தேவையெனில் மனநல நிபுணர்களின் உதவியை நாடுதல் போன்ற வழிகளில் மனநலத்தையும் வலுப்படுத்திடவேண்டும். சிறிய மனவலிகூட ஆழமான பிரச்சினையாக மாறாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதாவது, எப்படிச் சிறிய காயத்துக்கு உடனடிச் சிகிச்சை அளிக்கின்றோமோ அப்படியே. எளிதாகக் கூறினால், மனம் முறிந்தால், உடலும் நொறுங்கும். ஆகவே, மனமும் முக்கியமானது. அது கண்ணுக்கு தெரியாத சக்தியாக இருந்தாலும், எமது ஒவ்வொரு இதயத்துடிப்பையும், ஒவ்வொரு சிந்தனைத் துளியையும், ஒவ்வொரு கனவையும் செயற்படுத்தும் இயந்திரம் அதுவே. ஆகையால், உங்கள் மனம் சௌக்கியமாக உள்ளதா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சிப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அலகால் மிருசுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வளவாளர்க ளாக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.சுரேஸ்வரன், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏ.சிவலோஜினி, அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமுதாயச் சீர்திருத்தம்) ஆர்.தர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-9)



## 30வது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 10 . 1946

மறைவு 29 . 10 . 1995

**தங்கவேல் நாகேஸ்வரி**

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய - அம்மா
இன்னும் சில காலம் எங்களோடு வாழ மறந்ததேன் அம்மா?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
அணைந்து ஆண்டுகள் முப்பது உருண்டோட
எங்கள் மனம் அம்மாவை தேடி நிற்கிறது துவண்டு நிற்கின்றோம்.

**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS/59748) J-1

## நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நவ மகாஜன சிற்பி, தெ.து.ஜயரத்தினம் நினைவுதினமும், பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஜமுனாராஜசீலன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டச் செய லகத் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். நினை வுப்பேருரையை யாழ்.பல்கலைக்க ழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரை யாளர் திருமதி புரா தனி மதனரஞ்சன் ஆற்றுவார். (க-இ)

## காணி விற்பனைக்கு

நல்லூர் குறுக்கு வீதியில் நல்ல சூழலில் 6 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 01 பரப்பு 2 கோடி 25 இலட்சம்.

**தொடர்புகளுக்கு**

**077 364 0941**

(CS 30641) A

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்.
**சிறி சிவாஞ்சனா நகையகத்தின்**
உரிமையாளருமாகிய
**அமரர் சிவலிங்கம் சிவமூர்த்தி**
அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**யாழ் வணிகர் கழகம்**

(CR/46183) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## நாகராஜா கலாமணிதேவி (வேவி)



யாழ் வண்ணார்பண்ணை, பூநாறி மரத்தடியை பிறப்பிடமாகவும், காரைக் காட்டு லேனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராஜா கலாமணிதேவி (வேவி) அவர்கள் நேற்று (28.10.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமிப்பத்தர் - மங்களம்மா தம்பதியினரின் அன்பு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான நிர்மலாதேவி, பத்மநாதன், பகவதி மற்றும் கணேஸ்வரி, சிவகுருநாதன், செல்வநாதன், சாந்தசற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மங்கையற்கரசி, யோகராசா, குலமணி மற்றும் குலோத்தமி, வரதராஜா (அழகு), செல்வராஜா, காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் சுலோஜினிதேவி (ராணி), அருணாசலம், நாகஜோதி (ஜெயந்தி), சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற உமா மற்றும் மாலா, ஜெயகிருஷ்ணா (ஜெயா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சூரியகுமாரன், ஜெயப்பிரகாஷ் (அப்பன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந், ஸ்ருதி, ஸ்வாதி, சைந்தவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல. 72, காரைக் காட்டு லேன்**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 891 6407**

(CS/59753) J-1

தோற்றம் 02.11.1944

மறைவு 28.10.2025

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இனப்படுகொலைச்...

செம்மணிப் புதைகுழிகளுக்கு நீதி கோரி நேற்று இடம்பெற்ற போராட்டத் தில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

செம்மணிப் புதைகுழிக்கும், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கும் சர்வதேச விசாரணையே வேண்டும். ஆனால், சர்வதேசப் பொறிமுறையூடான தீர்வை இந்த அரசாங்கத்திடம் நாம் எதிர்பார்க்க முடியாது.

இனப்படுகொலைக்கு அர்த்தம் தெரியாத, இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் தொடர்பில் அறியாத அரசாங்கம் தீர்வைத்தரும் என எண்ணுவது சாத்தியமற்றது. நாம்தான் எமக்கான தீர்வைக் கண்டடைய வேண்டும். எனவே, அதற்குரிய நடவடிக்கைகளை நாம் ஒவ்வொருவரும் முன்னெடுப்பது அவசியமாகும். கொல்லப்பட்டவர்களின் குருதிகள் தமக்கான நீதியை பெற்றுத்தாருங்கள் என ஓலமிட்டவண்ணம் இருக்கின்றன -என்றார். (ம-26)

## யாழ்ப்பாணத்தில்...

ஒன்றாகக் காணப்படுகின்றது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 41 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 22 பேர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளனர்.

தற்போது 11 மாவட்டங்கள் டெங்கு அபாயம் அதிகம் உள்ள பகுதிகளாகக் காணப்படுகின்றன. இதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, கண்டி, மட்டக்களப்பு, குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பருவகால மழைவீழ்ச்சியைத் தொடர்ந்து 22 மாவட்டகளில் நுளம்பு பரவல் தீவிரமடைந்துள்ளது. எனவே, பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டியது அவசியம் - என்றுள்ளது. (ம)

## மாகாணங்களுக்கு...

அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பது நாட்டு மக்களின் கோரிக்கையாகும். பல வருடங்களாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, அடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சிந்திக்காமல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குரிய முக்கிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு உள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது. அதேவேளை, மாகாணசபைகளை ஆளுநர்கள் ஊடாக ஆள்வது ஜனநாயகம் அல்ல. எனவே, தமது பிரச்சினைகளை தமது பிரதிநிதிகள் ஊடாக தீர்த்துக்கொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும். மாகாணசபைகளுக்கு அதிகாரப்பகிர்வு அவசியம். எனவே, தேர்தல் நடத்தப்பட வேண்டும்' - என்றார். (ம-44)

## ஹெரோய்னுடன்...

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபரிடம் இருந்து 5 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்ட நிலையில், அவரைத் தடுத்து வைத்து விசாரணை நடத்துவதற்கு பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

## 62 லட்சம்...

விசேட பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யு.வூட்லர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கை மற்றும் விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் தற்போதுவரை 62 லட்சத்துக்கு மேற்பட்டோர் போதைப்பொருள் தொடர்பில் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதன்போது 5 ஆயிரத்து 467 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில், 57 ஆயிரத்துக்கு மேற்பட்ட பிடியாணைகள் தொடர்பிலும், 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திறந்த பிடியாணைகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், சந்தேகநபர்கள் சட்டவிரோதமாகக் குவித்து வைத்துள்ள சொத்துக்கள் தொடர்பிலும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ம-44)

## காணாமற்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெளிநாடொன்றுக்குச் செல்வதற்கு ஐந்து நாள்கள் இருந்த நிலையில், அந்த இளைஞர் அண்மையில் காணாமல் போயிருந்தார். அவரைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இவ்வாறான நிலையிலேயே, இளைஞரின் வீட்டில் இருந்து ஒன்றரைக் கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள காட்டில் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-113)

## தமிழ்ப்பொறுப்பதிகாரி...

நிவருகின்றது.

இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே, கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக எம்.சுல்தான் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-113)

## ரணிலுக்கு...

இன்று மீளவும் விசாரணைக்கு வரவுள்ளது. பிரிட்டனில் உள்ள தனியார் பல்கலைக் கழகம் ஒன்றில் இடம்பெற்ற, தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக அரச நிதியைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு ரணிலுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில் ரணில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். வழக்கு இன்றையதினம் மேலதிக விசாரணைக்காகத் தவணையிடப்பட்டிருந்தது. இதையடுத்தே வழக்கு இன்று விசாரணைக்காக மீண்டும் அழைக்கப்படவுள்ளது. ரணில் தரப்பின் மேலதிக சமர்ப்பணமும், அரச தரப்பின் மேலதிக சமர்ப்பணமும் இன்று முன்வைக்கப்படும் என்று சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, ரணிலுக்கு எதிரான வழக்கு முதன்முதலில் இடம்பெற்ற போது, நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற விடயங்களை சிலர் வீடியோவாகப் பதிவு செய்திருந்தனர். இன்னும் சிலர், ரணிலை சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்ல விடாது வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவ்வாறு குழப்பங்களில் ஈடுபட்டோரைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பாடசாலை...

நாட்டின் கல்விக் கட்டமைப்புத் தொடர்பான சீர்திருத்தங்களை தேசிய கல்வி நிறுவகமே வடிவமைத்து வருகின்றது. தேசிய கல்வி நிறுவகத்தின் நிபுணத்துவத் திட்டங்களை அமைச்சு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தேசிய கல்வி நிறுவகம் முதலில் ஒரு பாட நேரத்தை ஒரு மணிநேரமாக நீடிக்க முன்மொழிந்தது. ஆனால், நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, ஒரு பாட நேரம் 50 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டது. இதன் காரணமாகவே பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சீர்திருத்தங்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் முக்கியமான பரிந்துரைகளை மாற்ற முடியாது. எனவே, பாடசாலைகள் இயங்கும் நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிப்பது உறுதி - என்றார். (ம)

## ஹெரோய்னுடன்..

சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரிடம் இருந்து 2 கிராம் ஹெரோய்னும், கொக்குவில் மற்றும் பொற்பதி பகுதிகளைச் சேர்ந்த நபர்களிடம் இருந்து சிறிதளவு ஹெரோய்னும் மீட்கப்பட்டன. சந்தேகநபர்கள் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-26)

# மதுபான வரி செலுத்தல் காலக்கெடுவில் திருத்தம்

கொழும்பு, ஒக். 29

மதுபான உற்பத்தி மீதான வரி செலுத்தும் காலக்கெடு மற்றும் கட்டணங்களை வசூலிப்பதற்கான விதிகளைத் திருத்தி புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, குறித்த தினத்தில் இருந்து 30 நாள்களுக்குள் செலுத்த வேண்டிய முழு வரியையோ அல்லது கட்டணத்தையோ செலுத்தத் தவறும் உரிமதாரரின் போத்தல் நிரப்பும் உரிமத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என புதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஒரு புதிய சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுவரி செலுத்துவதில் உள்ள குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கில் இந்தப் புதிய வரிசெலுத்தும் காலக்கெடு திருத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (ச-இ)

# கட்டட நிர்மாணங்களுக்கு அனுமதிபெறுவது கட்டாயம்

## வேலணைப் பிரதேசசபை அறிவுறுத்து

வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குள் எந்தவொரு தரப்பினரும், கட்டடங்களை நிர்மாணிக்கும்போது பிரதேசசபையின் சட்டவிதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிபெற்று கட்டடங்களை நிர்மாணிக்கவேண்டும் எனத் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக பிரதேசசபையின் ஆளுகை க்குள் பல்வேறு கட்டுமானங்கள் முன்னெடுக்கப்பட்டுவருவதை அவதானிக்கமுடிகின்றது.

இதில் பல முறையான அனுமதிபெற்று நிர்மாண வேலைகளை முன்னெடுக்கவில்லை எனத் தகவல்களூடாக உறுதிசெய்யமுடிகின்றது.

இவ்வாறு முறையான அனுமதிபெறாது நிர்மாணிக்கப்படும் கட்டுமானங்கள் சட்டமுறையற்ற கட்டுமானங்கள் என்றே கருத்திற்கொள்ளப்படும். அத்துடன் அவ்வாறு அடையாளப்படுத்தப்படும் கட்டுமானங்கள்மீது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்க பிரதேசசபை நிர்ப்பந்திக்கப்படும்.

எனவே வேலணைப் பிரதேச ஆளுகைக்குள் கட்டுமானங்களை மேற்கொள்வோர் நடைமுறையைப் பின்பற்றுவது அவசியம் - என்றார். (ச-27)

# பெண்ணொருவர் கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், ஒக். 29

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நீர்வேலி மேற்குப் பகுதியில் கசிப்பை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் 36 வயதுடையவர் என்றும், அவருடைய உடமையில் இருந்து 5 லீற்றர் கசிப்பும், 20 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் நடப்பாண்டில் 414 முறைப்பாடுகள்!

**கொழும்பு,ஒக்.29**

**இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான 414 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

குறித்த காலப்பகுதியில் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 192 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 7,677 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
இந்த முறைப்பாடுகளில் 49 முறைப்பாடுகள் பாலியல் வன்புணர்வுடன் தொடர்புடையவை, 111 முறைப்பாடுகள் சிறுவர் தொழிலாளர் முறைமை தொடர்பாகவும், 203 முறைப்பாடுகள் பிச்சை எடுத்தலில் குழந்தைகளை ஈடுபடுத்துவது தொடர்பாகவும் உள்ளன. சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்துடன் தொடர்பில்லாத ஏனைய முறைப்பாடுகளில், இளவயது கர்ப்பம் தரித்தல் தொடர்பான 62 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதுதவிர, சிறுவர்க ளுக்கு எதிரான இணையத்தளத் துன்புறுத் தல் தொடர்பான 102 முறைப்பாடுக ளும், வீட்டு வன்முறை தொடர்பான 38 முறைப்பாடுகளும், தற்கொலை முயற்சி தொடர்பான 13 முறைப்பாடுகளும், கருக் கலைப்பு தொடர்பாக ஒரு முறைப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளது. போதைப்பொருள் கடத்தலுக்கு சிறுவர்க ளைப் பயன்படுத்துவது தொடர்பில் 27 முறைப்பாடுக ளும், 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்க ளுக்கு போதைப்பொருள் விற்பனை செய்வது தொடர்பில் 3 முறைப்பாடு களும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-இ)

## எதிர்க்கட்சி போராட்டத்தில் ஐ.ம.சக்தி பங்கேற்கவும்!

### பெரமுன அழைப்பு

கொழும்பு,ஒக்.29
நுகேகொடையில் எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்க எதிர்ப்புக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அக்கட்சியின் உறுப்பினரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேற்படி அழைப்பை விடுத்தார்.
இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் வேலைத்திட்டம் 21 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் ஐக்கிய மக்கள் சக்தியும் பங்கேற்கவேண்டும். இது தனிநபர்களைப் பிரசாரப்படுத்தும் கூட்டம் அல்ல. எனவே, இதில் பங்கேற்பதால் கட்சிகளின் தனித்துவத்துக்குப் பாதிப்பு ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு மாகாண அதிகாரம் அவசியம்

### *ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு*

கொழும்பு,ஒக்.29
வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு மாகாணசபை முறைமை அவசியம். அதற்குரிய நிர்வாக அதிகாரம் வழங்கப்படவேண்டும். எனவே மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையின்கீழ் விரைவில் நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும் சுஜீவ சேனசிங்க மேற்கண்டவாறு வலியுறுத்தினார். மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். பழைய முறைமையின்கீழ் அத்தேர்தலை நடத்தலாம். அவ்வாறு இல்லையேல் தேர்தல் மேலும் இழுத்தடிக்கப்படக்கூடும். விரைவில் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையையே நாம் விடுக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர் மற்றும் உணவு பரிமாறுபவர்கள் தேவைப்படுகின்றனர். (ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது). தங்குமிட வசதி உண்டு.

(CS/59746) J-1

தொடர்புகளுக்கு:- 077 119 0011

**காணி விற்பனைக்கு**

நாவற்குழியில் 55 பரப்பும், 5 1/2 பரப்பும், அராலியில் 200 பரப்பு, காரைநகர் வீதியில் இருந்து 1 Km தூரத்தில் கடந்கரை முன்பாக தொழிற்சாலை அமைக்க கூடிய உகந்த இடம்.
வாடகைக்கு கடையும், வீடும் யாழ். நகரில் உண்டு.
தனியார் கல்வி நிலையம் நடத்தக்கூடிய இடம்.

077 665 9736, 076 071 2676
077 662 6117

## அரசாங்கப் பிணையங்களில் வெளிநாட்டு முதலீடு உயர்வு

கொழும்பு,ஒக்.29
அரசாங்கப் பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அண்மைய தரவுகள் தெரிவிக்கின்றன என்று நிதிச்சந்தை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
கடந்த 23 ஆம் திகதிய நிலைவரப்படி, திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளில் உள்ள வெளிநாட்டு உடைமைகள் ரூ. 130.96 பில்லியனாக உயர்ந்துள்ளது.
இது கடந்த 2023 நவம்பர் 16ஆம் திகதிக்குப் பிறகு பதிவான மிக உயர்ந்த அளவாகும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
கடந்த 23ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் மட்டும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அரசாங்கப் பிணையங்களில் ரூ. 606 மில்லியன் நிகர முதலீட்டை மேற்கொண்டுள்ளனர்.
இந்தப் போக்கு நாட்டின் அந்நியச்செலாவணிக் கையிருப்புக்கும், ரூபாயின் உறுதிக்கும் சாதகமான சமிக்ஞையாகப் பார்க்கப்படுகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)

**காணி விற்பனைக்கு**

- யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 30 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 2 கடைகளும்.
- யாழ் கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும், 100 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்.
- யாழ் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில், பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்.
- யாழ் பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்.
- யாழ் KKS வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் KKS வீதியின் முகப்புடன் 6 பரப்பு காணியும்.
- யாழ் A9 வீதியல் 10 பரப்பு காணியும், 4 பரப்பு காணியும்.
- யாழ் நல்லூர்க் கோயிலுக்கு அண்மையில் 22 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
- யாழ் விக்டோரியா வீதியில் வீதி முகப்புடன் 16 பரப்பு காணியும், 8 பரப்பு காணியும்.
- யாழ் மானிப்பாய் வீதியில், ஈளநாடு பத்திரிகை காரியாலயத்துக்கு முன்பாக 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - கனகசபை தர்மகுலசிங்கம்
இடம் - No. 378, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 723 2535



நாவற்குழி சித்திர வேலாயதர் ஆலயத்தின் கந்தசஷ்டி உற்சவத்தின் சூரசங்ஹார உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு நடைபெற்றது. (ச-41-159)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.